## பிப்ரவரி - 21

**"என் கன்மலையும் என் கோட்டையும் நீரே; உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும்." - சங் 31 : 3**

சில படிப்பினைகளையும், அனுபவங்களையும் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிறார். அவைகளில் சில அமைதியான ஒய்வுள்ள நிலைமைகளால் நமக்கு வருகின்றன. இவைகளை அவர் கொடுத்த பிறகு காரிய கிரமத்தால் ஒழுங்கு மாற்றப்படலாம். அனுகூலமாகவும், பிரதிகூலமாகவும் இருந்த நிலைமைகள் கலைக்கப்பட்டு, புது சந்தர்ப்ப நிலைகளிடத்திற்கும், நிலைமைகளிடத்திற்கும் நடத்தப்படுவதை கர்த்தரின் பராமரிப்புச் சுட்டிக்காட்டும். முறுமுறுத்தலோ அல்லது முறையிடுதலோ அல்லது பிரியமானதை எடுத்துக் கொள்ளுவேன் என்று சொல்லுவதும் கூட, உண்மையான ஆவிக்குரிய இஸ்ரவேலனுக்கு அடுத்ததல்ல. ஆனால் நடத்தப்படுவதற்குக் கர்த்தரை சார்ந்திருக்க வேண்டும். தெய்வீகப் பராமரிப்பின் நடத்துதல்களால் அவன் நடத்தப்படுவதற்குக் கர்த்தரை சார்ந்திருக்க வேண்டும். தெய்வீகப் பராமரிப்பின் நடத்துதல்களை அவன் கண்டுகொள்ளக் கூடுமானால், அது மிகவும் வறண்டதும் முன்பு இருந்ததைவிட விரும்பப்படத்தகாத ஒரு வனாந்திர நிலைமையாய் இருந்தாலும், அவன் விசுவாசத்தின் நம்பிக்கையின் பாடல்களைப் பாடிக்கொண்டும், கர்த்தரின் வழிநடத்துதல்களில் கேள்வி கேட்காமலும் பின் தொடர வேண்டியவனாக இருக்கிறான். **- Z '02, 249 (R 3060).**

கொந்தளிக்கிற அலைகளுக்கு மேலாக எழும்பி இருக்கிற கன்மலை கொந்தளிப்பிலிருந்து தப்பி, தன்னிடம் தஞ்சம் அடைந்தவனைக் காப்பாற்றுகிறது போல, தேவன் நமக்குக் கன்மலையும், பாதுகாக்குகிறவராகவும் இருக்கிறார். நமது கோட்டையாக நம்முடைய விரோதிகளுடைய தாக்குதல்களுக்கு எதிராக அவர் நம்மைக் காப்பாற்றுவதோடல்லாமல், அவர்களுடைய தாக்குதல்களை முறியடிக்கிறதற்காக நம்மைப் பலப்படுத்துகிறார். காப்பாற்றுகிறவராகவும், பலப்படுத்துகிறவராகவும் நம்மை சத்தியத்தினால் வழிகாட்டி அவருடைய குணத்தை அடைவதற்கு அவருடைய பராமரிப்பினால் நடத்துகிறார். நமது தலைவராக நமது பாதைகளை செவ்வைப் படுத்துகிறார். நமது வழிகாட்டியாக இராஜ்யம் சேரும் வரை நமக்குத் தெரியாது வழிகளில் நமது மார்க்கத்தை நமக்குக் காட்டுகிறார்.

**- P '35, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஆதி 28:15; 49:24,25; யாத் 6:6,7; 12:13,17,23; 14:29,30; 19:4; 23:20; எண் 23:23; உபா 32:4; யோபு 1:10; சங் 34:15,17,19,20; 41:1-3; 46:1-7; சங் 91; 121;125:1-3; 146:7,8; மத் 10:29-31;

**கோபுர வாசிப்பு : Z '02 , 248 (R 3060).**

**வினாக்கள் :** என்னைப் பலப்படுத்துகிறவரும் எனக்கு வழிகாட்டுகிறவருமான தேவனுக்கு இந்த வாரத்தில் என்னை எவ்வாறு ஒப்புவித்தேன்? ஏன் எந்தச் சந்தர்ப்பங்களில்? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தவை எவை? பலன் என்ன?